# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 பங்குனி 14 வியாழக்கிழமை (27-03-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 120


# குடாநாட்டில் உள்ளூராட்சி தேர்தல் ஜூலை மாதத்துக்கு முன் நடக்கும்?

## அதனை அண்டி தீர்வுப் பொதி வரும்

கொழும்பு, மார்ச் 27

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல் அனேகமாக ஜூலை மாதத்துக்கு முன்னர் நடத்தப்படும் என்று கொழும்பில் விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் நடத்தப்படவிருந்த உள்ளூராட்சித் தேர்தல் எதிர்வரும் ஜூலை ஏழாம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தேர்தல் ஆணையாளர் அறிவித்திருந்த போதிலும் --

அதற்கு முன்னரே தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

மே அல்லது ஜூன் மாதத்தில் தேர்தலை நடத்துவதற்கான அறிவித்தல், விரைவில் வெளியிடப்படலாம் என்று அரசாங்க வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

தென்னிலங்கை உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர், அத்தேர்தலில் ஆளுங்கட்சி பெருவெற்றி பெற்ற பின்னர், அரசாங்க உயர் தலைவர்கள், கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி தலைமையில் கூடி அரசியல் நிலைமையை ஆராய்ந்தனர்.

அப்போது வடக்கில், குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என்ற கருத்து நிலவியதாகவும் அறியவந்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 6 படகுகளில் மேலும் 56 பேர் நேற்று வந்தனர்

குருநகர், மார்ச் 27

வன்னியில் இருந்து நேற்றுக் காலையிலும் 5 வள்ளங்களிலும் ஒரு பிளாஸ்ரிக் படகிலும் அகதிகள் குடாக்கடலினூடாக குருநகர் இறங்கு துறைக்கு வந்து சேர்ந்தனர்.

இதில் 22 குடும்பங்களைச் சேர்ந்த 56 பேர் இருந்தனர்.

இவர்கள் குருநகர், வடமராட்சி, கொட்டடி ஆகிய இடங்களில் இருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக வன்னிக்கு இடம்பெயர்ந்தவர்களாவர்.

இவர்கள் அனைவரும் குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இங்கு ஏற்கனவே தங்க வைக்கப்பட்டுள்ள அகதிகள் துரிதமாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் எதிர்வரும் பெரிய வெள்ளிக் கிழமைக்கு முன்னதாக வீடுசெல்ல அனுமதிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-51-4)

## புளொட் பிரமுகர் மீது பொலீஸ் விசாரணை

கொழும்பு, மார்ச் 27

புளொட் அமைப்பின் உப- தலைவர் என். மாணிக்கதாசன் மற்றும் அந்த இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் ஆறு பேர் கடந்த ஞாயிறன்று திருமலையில் இருந்து வவுனியா செல்லும் வழியில் கதறஸ்கொட்டுவ என்ற இடத்தில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அவர்கள் சென்ற வாகனத்தை அங்குள்ள சோதனை நிலையத்தில் தடுத்து நிறுத்திய பொலீஸார் அவர்கள் அனைவரையும் விசாரணை செய்தனர்.

அதன் பின்னர் அவர்கள் திருமலைக்கு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

(இ- 3)

## புலிகளுடன் மீண்டும் பேசுவதா? அரசு தரப்பு கட்சிகள் ஆராயும்

கொழும்பு, மார்ச் 27

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சு வார்த்தைகளை நடத்த வேண்டுமா என்பது குறித்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் அடுத்த வாரம் கூடி ஆராயவிருக்கின்றனர்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிப் பொதுச் செயலாளரும், அமைச்சருமான டி. எம். ஜயரத்தின மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்த அமைச்சர் தொண்டமான் முன்வந்துள்ளது தொடர்பாகவும்—

இலங்கை வந்த பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்தின் மத்தியஸ்த யோசனை தொடர்பாகவும் — இக் கூட்டத்தில் ஆராயப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-3)

## வவுனியா தடுப்பு முகாமில் சில கட்டுப்பாடுகள் நீக்கம்

கொழும்பு, மார்ச் 27

வவுனியாவில் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் விரும்பிய இடங்களுக்குச் செல்ல வசதியாக சில நடைமுறைகள் மாற்றப்பட்டுள்ளதாக வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

அவை வருமாறு:-

★ 60வயதுக்கு மேற்பட்டவர்களை அவர்களது உறவினர்கள் அல்லது வவுனியாவில் நிரந்தரமாகத் தங்கியுள்ளவர்கள் அழைத்துச் சென்று அவர்களை முகாமுக்கு வெளியே தங்கவைக்கமுடியும்.

★ 60 வயதுக்கு மேற்பட்டவர்களை தெற்கே அழைத்துச்செல்ல விரும்பும் அவர்களது உறவினர்கள் அல்லது தெற்கில் நிரந்தரமாக வசிப்பவர்கள் அவர்களை அழைத்துச் செல்லலாம்.

★ 50 வயதுக்குக் குறைந்தவர்களை அவர்களது பெற்றோர் அல்லது திருமணமான சகோதரர்கள் அழைத்துச் செல்ல முடியும்.

★ நோயாளர்களை குடும்ப அங்கத்தவர்கள் அல்லது உறவினர்கள் தெற்கே அழைத்துச் செல்ல முடியும். இதற்கு வவுனியா ஆஸ்பத்திரியில் சான்றிதழ் பெற வேண்டும்.

(இ-3-150)

## ரூபா 5 ஆயிரம் பெற்றவர்களின் உணவுமுத்திரைமீளப்பெறப்படலாம்

### அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 27

குடாநாட்டில் மீள் குடியேற்றக் கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா பெற்றவர்களின் நிவாரண உணவு முத்திரைகளை 3 மாத காலத்தில் மீளப் பெறுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மீள் குடியேற்ற கொடுப்பனவைப் பெற்றவர்கள், தமது தொழிலை சுயமாக மேற்கொள்கின்றார்களா என்பதை ஆராயவிருப்பதாகவும் —

அதையடுத்து இவர்கள் தற்சமயம் பெறும் நிவாரண முத்திரையை மீளப்பெறுவது தொடர்பாக ஆலோசிக்கப்படுவதாகவும் — அவர் மேலும் தெரிவித்தார்.

மீள் குடியேற்ற கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபாவை மேலும் ஒரு தொகுதி குடும்பங்களுக்கு வழங்க 10 லட்சம் ரூபாவை கொழும்பில்இருந்து எடுத்து வந்துள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

(இ-3)

## முச்சந்தி முரளி



அப்ப ஒரு கையால் கொடுத்து மறு கையால் பறிக்கிற திட்டம் போல ...!

## தேர்தல் முறைப்பாடுகள் குறித்து உடன் விசாரணை நடத்த உத்தரவு

கொழும்பு, மார்ச் 27

கடந்த வாரம் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில் — அதாவது வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து தேர்தல் நடைபெற்ற தினம்வரை — இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலீஸ் மா அதிபர் சம்பந்தப்பட்ட பொலீஸ் அத்தியட்சகர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்தக் காலகட்டத்தில் 2 ஆயிரத்து 800 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-10)

## அடுத்த சில வாரங்களுக்குள் அரசமைப்பு சீர்திருத்தம் பூர்த்தி

### பீரிஸ் நேற்றுத் தெரிவிப்பு

உத்தேச அரசமைப்பு சீர்திருத்தங்கள் யாவும் அடுத்த சில வாரங்களில் பூர்த்தி செய்யப்பட்டுவிடும். இந்த வருட நடுப்பகுதியில் இவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் பத்திரிகையாளர் மாநாடு நேற்று கொழும்பில் நடைபெற்றபோது நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய அரசமைப்புச் சட்டத்தின் 18 சரத்துக்களை அவர் நேற்றே பத்திரிகையாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

இவற்றில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவதற்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரியினதும் அமைச்சரவையினதும் ஆலோசனைப்படி ஜனாதிபதி செயலாற்றுவார். அவர் மரபு ரீதியான அல்லது பெயரளவிலான அரச தலைவராக இருப்பார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வெங்கடேசக்குருக்கள் குகசாமிக்குருக்கள்

அராலி தெற்கு, சிந்தாமணிப் பிள்ளையார் கோயில், நாகம்பாள் கோயில், பத்திரகாளி கோயில் ஆகியவற்றின் பரிபாலகரும் பிரதம குருவுமாகிய வெங்கடேசக்குருக்கள் குகசாமிக்குருக்கள் அவர்கள் 23-03-97 அன்று கண்டியில் காலமானார். அன்னார் பத்மாவதியின் அன்புக்கணவராவார்.

இவ்வறிவித்தலை அராலியூர் மக்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
மக்கள்,
மு. விஜயகாந்தக்குருக்கள்,
சீ. பரணிதரசர்மா
(மருமக்கள்)
பேரப்பிள்ளைகள்

(9437)

## தம்பித்துரை வன்னியசிங்கம்

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பித்துரை வன்னியசிங்கம் 22-03-1997 சனிக்கிழமையன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற தம்பித்துரை மற்றும் அழகம்மா ஆகியோரின் மகனும், வசுமதியின் அன்புக் கணவரும், அஜந்தன், நிசாந்தன், ஜனார்த்தனன், துவாரகா, துவாரகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பூபாலசிங்கத்தின் சகோதரரும், காலஞ்சென்ற துரை மற்றும் இராசேஸ்வரி, காலஞ்செனற முத்தையா மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்பு மருமகனும், மகாலிங்கம், பாலகிருஷ்ணன் ஆகியோரின் சகலனும், கலாமதி, ருமுதினி, வளர்மதி (கனடா), சின்னக்கிளி, வரதராஜன் (கனடா), ஜெயராஜன் (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27-3-97) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். தயவு செய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
த. பூபாலசிங்கம்
(சகோதரர்)

மதவடி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(45997)

## நடராசா சிவபாக்கியம்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவபாக்கியம் 26-03-1997 ஆம் திகதி புதன்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பண்டாரம் நேசம்மாவின் அன்புப் புதல்வியும், சிதம்பரநாதன் (வவுனியா), இந்திராணி (உரும்பிராய்), சிவராணி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நாகேஸ்வரி (சங்கீத ஆசிரியை, வவுனியா), குணரத்தினம் (உரிமையாளர், குயின்சி ரவல்ஸ்), பிறேமநாதன் செல்லக்கிளி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிதேனுகன், காலஞ்சென்ற நிலாவஞ்கன், கஜானி, வாகீசன், தாரணி, ரஜீவன், சுஜீவன், சஜீவன், விருசன், ஜெனிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 27-03-1997 வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக உரும்பிராய் வேம்பன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குணரத்தினம் இந்திராணி
(மகள்)

சிவகுல வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

(45999)

## திருமதி மாசிலாமணி இராசம்மா
(இணுவில் மேற்கு)

திருமதி மாசிலாமணி இராசம்மா அவர்கள் (24-3-97) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னையா மாசிலாமணி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தேவநேரு (முன்னாள் கிராம உத்தியோகத்தர், தாவடி வடக்கு), தேவராசா (கட்டிடத் திணைக்களம், கொழும்பு), ஸ்ரீதரன் (டென்மார்க்), ஸ்ரீகாந்தா (ஜேர்மனி), ஸ்ரீரஞ்சினி, சோதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் வசந்தகுமாரி, நிர்மலா (ஆசிரியர் கொழும்பு), பத்மலோசினி, அம்பாலி, பரமேஸ்வரன் (நிர்மாணத் திணைக்களம், யாழ்ப்பாணம்), யோகேஸ்வரலிங்கம் (ஆசிரியர், பாரதிவித்தியாலயம், சின்னடம்பன்) ஆகியோரின் மாமியாரும், மகிபன், மகதி, தருணி, பரணன், அர்ஜுன், டனுசன், தர்சன், காரணன், அரிராம், நிவேதினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25 - 03 - 1997 செவ்வாய்க்கிழமை பி. ப. 3 மணிக்கு 93, பீற்றர்சன் ஒழுங்கை, வெள்ளவத்தையில் நடைபெற்று பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,

இணுவில் மேற்கு,
இணுவில்,

(46000)

## 31 க்கு முன் உரிமங்களை பெற அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் உள்ள துவிச்சக்கரவண்டிகள், முச்சக்கரவண்டிகள் மற்றும் நாய்கள் ஆகியவற்றுக்கான இவ்வருடத்துக்கு உரிய உரிமங்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் உரிமங்களைப் பெற்றுக் கொள்ளுமாறும்—

அதன் பின்னர் வீதிகளில் நடத்தப்படும் திடீர் சோதனைகளின்போது ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும்— யாழ். மாநகரசபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

(இ-4)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 27

கொழும்பில் இருந்து செஞ்சிலுவைச்சங்கக் கப்பல் மூலம் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு எடுத்து வரப்பட்ட அம்புலன்ஸ் வாகனம் நேற்று உடனடியாகவே பணிமனைக்கு எடுத்து வரப்பட்டது.

ஏற்கனவே தீர்மானித்தபடி இந்த அம்புலன்ஸ் சாவகச்சேரி ஆஸ்பத்திரியின் பாவனைக்கே வழங்கப்பட்டுள்ளது.

(இ-15)

## நயினாதீவில் ஏழு படையினர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27

நயினாதீவுப் பகுதியில் இம்மாதம் பதினாறாம் திகதி ஞாயிற்றுக்கிழமை தாம் நடத்திய தாக்குதலில் ஏழு கடற்படையினர் உயிரிழந்தனர்என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து அவர்கள் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் —

சம்பவ தினம் நயினாதீவுப் பகுதியில் ''லான்ட் மாஸ்டர்'' வாகனத்தில் சென்று கொண்டிருந்த கடற்படையினர் மீது தாம் நடத்தியதாக்குதலில்அந்தஇடத்திலேயே ஏழு பேர் கொல்லப்பட்டதாகவும், இரண்டு பேர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து நயினாதீவுக்கான கடல் வழிப் பாதைகள் துண்டிக்கப்பட்டதாகவும் —

நயினாதீவில் சோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும் —

ஐந்து நாள்களின் பின்னரே அப்பகுதியில் வழமை நிலை திரும்பியதாகவும் —. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

யூனிவேர்சல்
கந்தர்மடம், யாழ்நகர்.
இரசாயனவியல்
96, 97
A/L
அசேதன
இரசாயனம்
வினா விடை வகுப்பு
திரு. க. சிவத்திரன்
B. Sc. (Hons)
ஆரம்பம்
28-03-97
வெள்ளி 7.00 A.m.
(46001)

வைத்திய சேவை

வாதரோகமா? சருமரோகமா?
தொய்வு வியாதியா? மலேரியாவா?
நீரிழிவா? உடல் மெலிவா?
உடல்பருமனா?
குழந்தைகளின் வியாதிகளா?
நாள்ப்பட்ட ரோகங்களா?
சகல விதமான நோய்களுக்கும் சிறந்த சிகிச்சைபெற 28 ஆண்டுகளுக்கும் மேலாக வைத்திய சேவையாற்றி வரும் எம்மிடம் கலந்தாலோசியுங்கள்!

டாக்டர் த. சிவானந்தன்
சிவா வைத்திய நிலையம்
தலைமை - 250, பலாலி வீதி, கந்தர்மடம்.
(காலை 8.30 - 12.30)
கிளை - 270, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(பிற்பகல் 3.00 - 6.00)
(46003)

புது வருடத்தை முன்னிட்டு
வாணி ரெக்ஸின்
புதிய தெரிவுகள்
★ திருமண பட்டுப் புடைவைகள், பட்டுவேட்டிகள்
★ சகலவிதமான பிளேன், பிரின்டட் துணிகள்
(ஜோஜோ, பட்டசில்க், இன்ரகூலர், சுப்பர்கலர்)
★ சிறுவர் சிறுமியர்களுக்கேற்ற
றெடிமேட் ஆடைகள்
★ புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட சாறிவகைகள்
மற்றும்
மகளிர் மனதைக் கொள்ளை கொள்ளும்
ஸ்கேட்அன் பிளவுஸ், கவுண், பஞ்சாபிவகைகள்
ஆடவர்களுக்கான
சேட்டிங், சூட்டிங், Tசேட் வகைகள்
அனைத்திற்கும்
பட்டுப் பளபளக்கும்
பட்டாடை உலகம்
வாணி ரெக்ஸ்
இல. 11, நவீன சந்தை, சாவகச்சேரி.

புத்தாண்டினைப் புதுப் பொலிவுடன்
கொண்டாட
செல்வம் பென்ஸியின்
புதுவருட மலிவு விற்பனை
★ அழகுக்கு அழகு தரும் புத்தம் புதிய
நவீன டிசைன்களில்
பாட்டா, றண்பா, D. S. I. சிலிப்பர் வகைகள்.
★ பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்கான
பேக் (Bag) மற்றும் உபகரணங்கள்.
★ சகல விதமான ரேடியோ. சுவர் மணிக்கூடுகள்
★ ஆண், பெண் கைக்கடிகாரங்கள்
★ பிலிம் சுருள், கசட் வகைகள்
ஆகியவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்:
செல்வம் பென்ஸி
இல. 10, நவீன சந்தை, சாவகச்சேரி.
(சி/380)

# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி காங்கேசு

நெடுந்தீவு மேற்கு, முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி காங்கேசு 24-03-97 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் காங்கேசுவின் (நெடுந்தீவு பல. நோ. கூ. சங்கம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற கார்த்திகேசு மற்றும் திருமதி சவுந்தரம் ஆகியோரின் அன்பு மகளும், கோபாலபிள்ளை (கிராம அலுவலர்), காலஞ்சென்ற இராமநாதன் (தபாலதிபர்), சிவஞானம் (கிராம அலுவலர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலாதேவி, நிர்மலாதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26-03-97 புதன் கிழமை கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. கோபாலபிள்ளை
(கிராம அலுவலர்- சகோதரன்)

நெடுந்தீவு மேற்கு,
நெடுந்தீவு.

(45994)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும்பல வெடி குண்டுகள் தமிழகத்தில் மீட்கப்பட்டன!

சென்னை, மார்ச் 27

தமிழகத்தில் திருச்சிராப்பள்ளியில் இருந்து 100 கிலோ மீற்றர் தொலைவில் கல்லுப்பட்டி என்ற கிராமத்தில் இரண்டு பண்ணை வீடுகளில் இருந்து பெருமளவு வெடி மருந்தும், வெடிக்க வைக்கும் கருவிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அப் பகுதியில் நேற்று முன்தினம் முழுவதும் பொலீஸார் மேற்கொண்ட தேடுதலின் போது 83 வெடி மருந்துப் பெட்டிகளும் ஜெலிக்னைற் குச்சிகளும் கைப்பற்றப்பட்டன.

கடந்த ஞாயிறன்று துவரங் குறிச்சி என்னுமிடத்தில் வேகமாகச் சென்று கொண்டிருந்த கார் ஒன்றை வழிமடக்கி பொலீஸார் சோதனை செய்தபோது அதிலிருந்து வெடி மருந்து வகைகளைக் கைப்பற்றினர். இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களில் ஒருவரான அபூபக்கர் என்பவர் கொடுத்த தகவலை அடுத்தே கல்லுப்பட்டியில் இருந்து வெடிமருந்து மீட்கப்பட்டிருக்கிறது.

கடந்த மூன்று வாரங்களின் முன்னர் சென்னைக்கு அருகே குடந்தையூரில் ஏராளமான வெடிகுண்டுகள் மீட்கப்பட்டதும் — முஸ்லீம் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட இருவர் கைது செய்யப்பட்டதும் மத கலவரங்கள் இன்றி அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்தில் பரபரப்பை ஏற்படுத்தி விட்டன.

மும்பாயில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களை ஒத்த தொடர்ச்சியான தாக்குதல்களைத் தமிழ் நாட்டிலும் நடத்துவதற்கான சதி வேலையின் நடவடிக்கையே இந்த வெடி குண்டுகள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ)

# அமெரிக்க பிரதிநிதி இஸ்ரேல் விரைவு!

நியூயோர்க், மார்ச் 27

மேற்கு ஆசிய சமாதான முயற்சிகள் பின்னடைவைச் சந்தித்திருப்பதை அடுத்து அங்கு சென்று பலஸ்தீனிய பிரதிநிதிகளுட்னும் இஸ்ரேலியப் பிரதி நிதிகளுடனும் பேச்சு நடத்துமாறு அமெரிக்கப் பிரதிநிதியான டென்னிஸ்றோஸை அதிபர் பில் கிளின்ரன் பணித்துள்ளார். இதனையடுத்து நியூயோர்க்கில் இருந்து அவர் இஸ்ரேலுக்குச் சென்றுள்ளார்.

அரபு கிழக்கு ஜெருஸலேமில் ஆக்கிரமித்த பகுதியில் யூதக் குடியிருப்புகளை அமைக்கும் இஸ்ரேலின் திட்டத்தினால் மத்திய கிழக்கில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

ரெல் அவிவ் நகரில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் பின் பலஸதீனியருக்கும், இஸ்ரேலியர்களுக்கும் இடையே மோதல்கள் தீவிரமடைந்துள்ளன.

(ஐ)

## கிளின்ரனுக்கு ஹுசெய்ன் விளக்குவார்

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் ஜோர்தான் மன்னர் ஹுசெய்னை அடுத்த வாரம் சந்தித்து மத்திய கிழக்கு அமைதி முயற்சியின் பிந்திய நிலைவரம் குறித்து கலந்துரையாடவுள்ளார்.

மருத்துவப் பரிசோதனைக்காக அமெரிக்கா சென்றிருக்கும் மன்னர் ஹுசெய்ன் அடுத்த செவ்வாய்க்கிழமை வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் கிளின்ரனைச் சந்திப்பார்.

மன்னர் ஹுசெய்ன் மத்திய கிழக்கு அமைதி முயற்சியில் முக்கிய பங்காற்றி வருவது தெரிந்ததே. (ஐ-10)

# ரஷ்யாவில் இன்று வேலை நிறுத்தம்

நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றை இன்று வியாழக்கிழமை நடத்துவதற்கு ரஷ்யாவில் உள்ள தொழிற் சங்கங்கள் ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

கடந்த பல மாதங்களாக அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படாமல் இருப்பதை எதிர்த்தே இந்த வேலை நிறுத்தம் நடைபெறவுள்ளது.

நாளைய வேலை நிறுத்தத்தில் சுமார் 70 லட்சம் பேர் பங்கு கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ)

## அகதிகளைக் கட்டுப்படுத்த இணக்கம்

அல்பேனியாவிலிருந்து இத்தாலிக்குப் படையெடுக்கும் அகதிகளைத் தடுக்கும்முயற்சிகளை மேற்கொள்ள இருநாடுகளும் இணங்கியுள்ளன—

அல் பேனியாவின் புதிய பிரதமர் பஸ்கின்பினா இத்தாலியப் பிரதமரை ரோமில் சந்தித்ததைத் தொடர்ந்து. இந்த இணக்கம் காணப்பட்டது.

கடந்த 10 நாள்களில் மட்டும் 12 ஆயிரம் அல்பேனியர்கள் இத்தாலிக்குச் சென்றுள்ளனர். (ஐ-10)

## புதிய பதவி

ஐ.நா.சபையின் முன்னாள் பொதுச் செயலர் பூட்ரஸ் பூட்ரஸ்காலி பிரான்சிய மொழி பேசும் நாடுகளின் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பதவியை விரைவில் ஏற்றுக் கொள்ளக் கூடும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரிட்டிஷ் கொமன்வெல்த் நாடுகளைப் போல பிரான்சிய மொழிபேசும் நாடுகளின் அமைப்பினை உருவாக்க கடந்த சில ஆண்டுகளாக பிரான்ஸ் முயன்றுவருகிறது. பிரான்சிய மொழி, கலாசாரம் ஆகியனவற்றை உலக அளவில் சக்தி கொண்டதாக ஆக்குவதே இதனுடைய நோக்கமாகும். இந்தஅமைப்பில் பிரான்சிய மொழிபேசும் 49 நாடுகள் அங்கம் வகிக்கும்.

# இந்துக்கள்- பொலீசார் காஷ்மீரில் மோதல்!

## 100க்கும் மேற்பட்டோர் காயம்

புதுடில்லி, மார்ச் 27

இந்திய அரசின் அதிகாரத்துக்குட்பட்ட ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் தலைநகர் ஸ்ரீநகரில் இந்துக்களுக்கும் பொலீஸாருக்கும் இடையே மூண்ட கடும் கலவரத்தில் நூற்றுக்கு மேற்பட்ட இந்துக்கள் காயமடைந்தனர்.

காஷ்மீர் பள்ளத்தாக்கில் ஆயுதக்குழு ஒன்று கடந்த வாரம் 7 இந்துக்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சுமார் 10ஆயிரம் பேர் மாநில சட்டமன்ற வளாகத்தை நோக்கி பேரணி நடத்திய வேளை இந்த மோதல் இடம் பெற்றது.

சட்டமன்ற வளாகத்துக்கு வெளியே பொலீஸாரும், இந்துக்களும் மோதிக்கொண்டனர். பொலீஸார் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களால் தாக்கினர். முதலில் குண்டாந்தடித் தாக்குதலை மேற்கொண்ட பொலீஸார் பின்னர் கூட்டத்தை கலைக்க துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்னர் பிரிவினைப் போராட்டம் தீவிரமடைந்த போது ஏறத்தாழ 2 லட்சத்து 50 ஆயிரம் காஷ்மீர் இந்துக்கள் பள்ளத்தாக்கை விட்டு வெளியேறியிருந்தனர். இவர்களில் பலர் ஜம்முவில் அகதிமுகாம்களிலும் வாழ்கின்றனர்.

(ஐ)

**உலக அரங்கில்**

## காஷ்மீர் முதல்வர் எச்சரிக்கை

படுகுழிகளைத் தோண்டுபவர்கள் அதிலேயே விழுந்து மடிவார்கள் என காஷ்மீர் தீவிர வாதிகளுக்கு ஜம்மு காஷ்மீர் முதல்வர் பாருக் அப்துல்லா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தீவிரவாதிகள் துப்பாக்கியின் சக்தியையே விரும்புகின்றார்கள். அவர்களிடம் இருப்பதை விட சக்திவாய்ந்த துப்பாக்கிகள் அவர்கள் மீது திருப்பப்படலாம் என்பதை அவர்கள் உணர வேண்டும் என்றும் பாருக் அப்துல்லா எச்சரித்தார்.

# பங்களாதேஷ்சுதந்திரதின விழாவில் யஸீர் அரபாத்,நெல்சன் மண்டேலா

டாக்கா, மார்ச் 27

பங்களாதேஷ் தனது 26 ஆவது சுதந்திரதின விழாவை நேற்றுக் கொண்டாடியது.

டாக்காவில் நடைபெற்ற சுதந்திரதின விழாவில் தென்னாபிரிக்க தலைவர் நெல்சன் மண்டேலா, துருக்கி நாட்டு அதிபர் டொமரல், பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

1971 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் திகதி பங்களாதேஷ் தேசிய உணர்வை வேர் அறுக்கும் நோக்கில் ஆயிரக்கணக்கான டாக்கா நகர மக்களை குருவிகள் போல் பாகிஸ்தானியப் படைகள் சுட்டு வீழ்த்தின.

வரலாற்றில் இது கறுப்பு இரவு (Black Night) எனக் கூறப்படுகிறது. இந்தப் படுகொலையே பாகிஸ்தான் படைகளுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தை முஜிபுர் ரகுமான் தொடங்கக் காரணமாக அமைந்தது.

முஜிபுர் ரகுமான் மறுநாள் கைது செய்யப்பட்டார். ஆனால் தான் கைது செய்யப்படு முன்னரே அவர் வங்க தேசத்தின் சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தி விட்டார்.

அதைத் தொடர்ந்து 9 மாதங்கள் உள்நாட்டுப் போர் இடம்பெற்றது. 30 லட்சம் மக்கள் இந்த உள்நாட்டுப் போரில் உயிரிழந்தனர்.

(ஐ-10)

# 96 ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் வவுனியாவில் மோசடிச் சம்பவம்?

## உயரதிகாரிகள் விசாரணை

யாழ்ப்பாணம், மார்ச் 27

கடந்த ஆண்டு நடைபெற்ற ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சையின் போது வவுனியா மாவட்டத்தில் தேர்வு நிலையம் ஒன்றில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடான சம்பவம் தொடர்பாக கல்வித் திணைக்கள உயரதிகாரிகள் விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சு. டிவகலாலாவின் உத்தரவின் பேரில் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஒருவர் வவுனியாவுக்குச் சென்று இது தொடர்பான விசாரணையை ஆரம்பித்தார்.

1996 ஆம் ஆண்டு நடந்த ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சையில் தனிப்பட்ட பரீட்சார்த்தியாகத் தோற்றிய வவுனியாவில் உள்ள கல்வி உயர் அதிகாரி ஒருவரின் மகள் அப் பரீட்சையில் 3ஏபி பெறுபேறு பெற்றுள்ளமை தொடர்பாக மாகாணக் கல்வி அமைச்சுக்கும், கல்வி உயர்கல்வி அமைச்சுக்கும் பல முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டதை அடுத்தே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

1995 இல் நடந்த பரீட்சையில் 4 பாடங்களிலுமே சித்தியடையாத இந்த மாணவி 1996 இல் நடைபெற்ற இப் பரீட்சையில் மருத்துவ பீட அனுமதியைப் பெறத்தக்க பெறுபேற்றைப் பெற்றதற்கு பரீட்சையின் போது இடம்பெற்ற மோசடியே காரணம் என்று பலர் முறைப்பாடு தெரிவித்திருந்தனர்.

விடைத்தாள்கள் வைக்கப்பட்ட பொதி பிரிக்கப்பட்டு வேறு ஒரு விடைத்தாள் உள்ளே வைக்கப்பட்டதாக முறைப்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ)

# 12மணித்தியாலத்துக்குள் முடங்கும் யாழ்.மக்களின் நாளாந்தவாழ்க்கை

## பி. பி. ஸிக்கு மரியசேவியர் அடிகளார் பேட்டி

லண்டன், மார்ச் 27

யாழ்ப்பாணத்திலே மக்களது நிலைமை ஒரு சாதாரணமான நிலைமை என்று கூறமுடியாது. அவர்களுடைய வாழ்க்கை காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி மாலை 6.30 மணிக்குள் முடிவடைகிறது. அதற்குள்ளே நடக்கின்ற வாழ்க்கை தான் அவர்களுடைய வாழ்க்கை அந்த12 மணித்தியாலயத்துக்குள்ளும் அவர்கள் ஒவ்வொரு சோதனைச் சாவடியையும் (சென்ரி) தாண்டி தங்களுடைய நாளாந்த வாழ்க்கையைச் செய்யவேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து சில நாள்களுக்கு முன்பு புறப்பட்டு நேற்று லண்டனுக்கு வந்துசேர்ந்த திருமறைக் கலாமன்ற இயக்குநர் மரிய சேவியர் அடிகளார் பி. பி. ஸிக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அலுவலகங்கள் பெரும்பாலும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. பாடசாலைகளுக்குப் பிள்ளைகள் அனேகமாக 25 சதவீதம்தொடக்கம் 70 சதவீதம் வரையும் வருகை தருகின்றனர். ஆசிரியர்களது பற்றாக்குறை அங்கு பெரிதும் காணப்படுகின்றது. ஆகவே, பள்ளிக்கூடங்களைப் பொறுத்தமட்டிலும் குறிப்பாக யாழ். குருநகரில் பெரும்பாலும் அவை ஓரளவு இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று கூறலாம்.

மருந்தைப் பொறுத்தவரையில் உண்மையாக மக்களுடைய நிலைமை பரிதாபகரமானதாக உள்ளது. மருத்துவர்களின் பற்றாக்குறை உள்ளது. மருத்துவர்கள் அங்கு அதிகமாக இல்லை. இருக்கின்றவர்களும் வெளியேறுகின்றனர். இந்த சூழ்நிலை எமக்குப் பாதகமாகவே உள்ளது.

கேள்வி: இராணுவத்தினரின் போக்கு அங்குஎப்படிஉள்ளது?

பதில்: உண்மையில் இராணுவத்தினரின் போக்கைப் பார்த்து நான் வியக்கின்றேன், அவர்கள் மிகவும் நட்போடு மக்களுடன் பழகுகிறார்கள். சிறுவர் களுடன் பேசுகிறார்கள், சிலசமயத்தில் மக்களுக்கு உதவுகிறார்கள். இந்தப்போக்கு உண்மையாக ஒரு மனிதத் தன்மையுடன் இணைந்தபோக்காக எனக்கு தென்பட்டது. இதற்குப் பின்னணியில் எந்த அரசியல் இருக்குமோ தெரியாது. ஆனால் அவர்களும் மனிதர்கள் என்ற முறையில் நடமாடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ச. ச. நிலையங்களுக்கு

## புதிதாக நிர்வாகிகளை தெரிவு செய்யக் கோரிக்கை

கொழும்புத்துறை, மார்ச் 27

யாழ். மாவட்டத்தில் அரச நன்கொடை பெறும் சகல சனசமூக நிலையங்களும் அடுத்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பொதுக் கூட்டத்தைக் கூட்டி புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்ய வேண்டும் என்று யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.

இன்றைய சூழ் நிலையில் கிராம மட்டத்தில் சனசமூக நிலையங்களின் பங்களிப்பு மிக அவசியமானது என்றும், தற்போதைய நிர்வாகிகள் நடப்பு ஆண்டுக்குரிய புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்து அது தொடர்பான விவரங்களை உள்ளூராட்சித் திணைக்களத்துக்கும், யாழ். மா. ச. ச. நிலையங்களின் சம்மேளனத்துக்கும், உப சமாசம், பிரதேச சபை சமாசங்களுக்கும் அனுப்பி வைக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-30)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாண கல்வி மாவட்ட வலயம் ஒன்றுக்கு உட்பட்ட பாடசாலைகளில் வணிகப் புள்ளிவிவரவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலக் கருத்தரங்கு இன்று வியாழன் முற்பகல் 10-30 மணியளவில் யாழ். திருக்குடும்ப கன்னியர்மட மகளிர் வித்தியாலயத்தில் (ஆங்கிலப் பிரிவு) ஆரம்பமாகும்.

யாழ்.பல்கலைக்கழக புள்ளிவிவரவியல் விரிவுரையாளர் செ. இளங்குமரன் ''மாதிரி எடுத்தல், புள்ளிவிவர அனுமானங்கள்'' எனும் தலைப்பில் கருத்தரங்கினை நடத்துவார். (ஐ)


நடனமுருகன் வைத்திய நிலையம்

வன்னியில் இயங்கிய நடனமுருகன் வைத்திய நிலையம் மீண்டும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, சத்திரச் சந்தியில் தனது சேவையைத் தொடர்கிறது.

கிளை நிலையம்: வேலணை தெற்கு, வேலணை.

(45976)

வீடியோ படம் பிடித்திடவும்,
அழகிய வேலைப்பாடுகள் அமைந்த
சொக்கட்டான் மணப்பந்தல் அமைத்திடவும்

நாடுங்கள்:

**வீடியோ கலாமினி**

அச்சுவேலி.

(45991)


## நல்லூர் ப.நோ.கூ. சங்கம்

## பதவி வெற்றிடம்

### உறுப்பினர் தொடர்பு மற்றும் பயிற்சியளிக்கும் உத்தியோகத்தர்

மேற்படி பதவிக்குத் தகுதிவாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**சம்பளத்திட்ட இலக்கம்:** 201: 10

**சம்பளம்:** 855 — 30x7 — 40x8 — 1,385/-
இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் இதர படிகளும்.

**வயது:** 23 இல் இருந்து 40 வயது வரை.
(கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது)

**தகைமைகள்:**

அ. கூட்டுறவுச் சங்க ஊழியர் 11ஆம் சம்பளத் திட்டத்தில் உறுப்பினர் தொடர்பு/பயிற்சியளித்தல் பற்றிய பதவியொன்றில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 12ஆம் சம்பளத்திட்டத்தில் பதவியொன்றில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது,

ஆ. கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ்/ க. பொ. த. (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தி.

**விண்ணப்ப முடிவு திகதி:** **12-04-1997**

**பிணை:**

சங்கத்தால் கோரப்படும் பிணையைச் செலுத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் பொது முகாமையாளர், நல்லூர் ப. நோ. கூ. சங்கம், திருநெல்வேலி என முகவரியிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டு 12 - 04 - 1997 திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

தகுதியற்றதும், முடிவு திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பொது முகாமையாளர்,
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்.

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(சி/378)

## பரிசுத்த வாரம்

(நான்காம் நாள் - பெரிய வியாழன்)

''... உலகிலிருந்த தம்மவர் மேல் அன்பு கூர்ந்த அவர், இறுதிவரை அவர்கள் மேல் அன்பு கூரலானார்...''

(அரு. 13:1).

'ஒருவன் தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு வேறெதுவும் இல்லை' என்று போதித்த இயேசு, அதைத் தம் வாழ்வில் சாதித்துக் காட்டும் கட்டத்திற்கு வந்துவிட்டார்.

தாம் பாடு படுவதற்கு முதல் நாள் இரவு தம் சீடரோடு பாஸ்காப் பலி உணவில் பந்தி அமர்கிறார். பாஸ்கா எனப்படும் புளியாத அப்பத் திருவிழா யூதர்களால் அவர்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையான நிகழ்வைக் குறித்துக் கொண்டாடப்படும் நன்றி விழாவாகும். இவ்விழாவில் மாசு மறுவற்ற செம்மறி பலியிடப்பட்டு உண்ணப்படுவது வழக்கம்.

மாசு மறுவற்ற புதிய உடன்படிக்கையின் செம்மறி தானே என்பதை இயேசு உணர்த்தி, தன்னை உணவாகவும், பானமாகவும் தன்னில் விசுவாசம் கொள்வோர் உண்டு பருகி தன் அன்பில் நிலைத்திருக்க வேண்டுமென்று நற்கருணையை, அளப்பரிய அன்பின் அருட்சாதனமாக்கி அதை வழங்கும் குருத்துவத்தையும் ஏற்படுத்துகின்றார் இன்று.

''இது உங்களுக்காக அளிக்கப்படும் என் உடல்; இதை என் நினைவாகச் செய்யுங்கள்.''

''இக் கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படும் என் இரத்தத்தினாலாகும் புதிய உடன்படிக்கை.''

இவ்வாறு மொழிந்து அப்பத்தையும், இரசத்தையும் தம் சீடர்களுக்கு அளிக்கின்றார்.

அதே வேளை, நற்செய்தியாளர் அருளப்பரின் கூற்றுப்படி, இந்த இரவுணவின் போது, பந்தியிலிருந்து எழுந்த இயேசு தமது சீடர்களின் பாதங்களைக் கழுவி அவர்களுக்கு முன் மாதிரிகை காட்டுகின்றார். யூதரின் மரபுப்படி விருந்தளிப்பவரின் வேலையாள் அல்லது அடிமை விருந்தாளியின் பாதங்களைக் கழுவுவான். ஆனால் இங்கு ஆண்டவரும், போதகருமாகிய இயேசு தூசு படிந்த தம் சீடரின் பாதங்களைக் கழுவித் துடைத்து, அன்புப் பணிவிடை புரிந்து, நற்கருணையை வழங்குவது இப்படித்தான் என்று அவர்களுக்குக் கற்பிக்கின்றார்.

அதேவேளை, தன்னை இயேசு கழுவுவதைத் தடுக்க முயன்ற இராயப்பரை நோக்கி, ''நான் உன்னைக் கழுவாவிடில் உனக்கு என்னோடு பங்கில்லை'' என்கிறார். ஆகவே இயேசு இங்கு சீடர்களின் பாதங்களைக் கழுவும் நிகழ்வு, இயேசுவின் மீட்பளிக்கும் மரணத்தில் அவர்களும் பங்கு கொள்வதைக் குறிக்கின்றது.

பொது நலவாதிகள், பிறர் பணியாளர்கள் என்று தமக்கு விலாசமிட்டுள்ள அனைவரையும், இன்னும் திருமுழுக்கில் இயேசுவின் மரணத்திற்குள் புதைக்கப்பட்ட எல்லோரையும் பணம், பட்டம், படிப்பு, பதவி, அதிகாரம், ஆணவம்... போன்ற உலகத் தன்மைகளுக்காக வாழும் வாழ்வை மாற்றி, பிறருக்காகத் தங்களையே உடைத்துக் கொடுக்கும் தற்தியாக அன்பியல் வாழ்வுக்கு அழைத்து நிற்கின்றது இன்றைய விழா நிகழ்வு.

- அருட்திரு. இரா. தேவசநாதன்

## பணிப்பாளர்கள் இல்லா நிலையில் உடுவில் கல்விக் கோட்டம்

உடுவில் கல்விக் கோட்டத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிகள் வெற்றிடமாக உள்ளன.

இங்கு கடமையாற்றிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு சு. இரத்தினராசா யாழ். கல்வி வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார்.

இக் கோட்டத்துக்கான தகுதிவாய்ந்த பணிப்பாளர்எவரும் இது வரை நியமிக்கப்படவில்லை.

உதவிக் கல்விப் பணிப்பாளரோ அல்லது பிரதிக்கல்விப் பணிப்பாளரோ உடுவில் கல்விக்கோட்டத்தில் கடமைக்கு நியமிக்கப்படாமையால் இக் கோட்டத்தை சேர்ந்த ஆசிரியர்கள் தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாது சிரமப்படுகின்றனர்.

எந்த ஒரு சிறிய அலுவல் ஆயினும் ஆசிரியர்கள் கோப்பாயில் உள்ள கல்வி வலயம் இரண்டுக்கு சென்றே தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டி இருக்கின்றது.

## கே.ஸி.ஸி.ஸி. வெற்றி

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய (கே.ஸி.ஸி.ஸி) அணியினருக்கும், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க (மல்லாகம் ஆர்.டி.எஸ்.அணியினருக்கும் இடையிலான சினேகித பூர்வ கிரிக்கட் ஆட்டம் ஒன்று கடந்த சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றதுகே.ஸி.ஸி.ஸி. அணி வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கே. ஸி. ஸி. ஸி. 40 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றது. சபாஆனந்தத் 50 ஓட்டங்களை பெற்றார்.

அடுத்துதுடுப்பெடுத்தாடிய மல்லாகம் ஆர்.டி.எஸ். அணி 40 ஓவர்களில் 9 விக்கட்டுக்களை இழந்து215 ஓட்டங்களைப் பெற்றது. சீராளன் 77 ஓட்டங்களையும், அரவிந்தன் ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களையும் பெற்றனர்.

இவ்வாட்டத்திற்கு மத்திஸ்தர்களாக ஏ. சிவலிங்கம், சு. சிறீகாந்தன் ஆகியோர் கடமையாற்றினர்.

இந்த கிரிக்கெட் பருவகாலத்தில் யாழ்ப்பாணத்தில் கழகங்களுக்கு இடையிலான முதல் போட்டி இதுவே என்பது குறிப்பிடத்தக்கது.

## வீரசைவ மரபியல் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 27

ஆசிரியர் சோ. பரமசாமி எழுதிய 'வீர சைவ மரபியல்' நூல் வெளியீட்டு விழா இணுவில் இந்துக் கல்லூரியில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபால கிருஸ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இணுவில்ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோயிலில் விசேட பூசையைத் தொடர்ந்து நூல் சுவடி அங்கிருந்து விழாமண்டபத்துக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும்.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி சபா. ஜெயராஜா நூலை வெளியிட்டுவைப்பார்.

ஆய்வுரையை இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் எம். வேதநாதன் வழங்குவார். (ஐ-3-154)

## தேவை

பாதுகாப்பு உத்தியோகத்தர்களும்,
அலுவலக சிற்றூழியர்களும்
தேவை.

27, 28 - 03 - 97 திகதிகளில் சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

முகாமையாளர் (ஆளணி),
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## உள்ளக கணக்காய்வாளர் (Internal Auditor)

அனுபவமுள்ள உள்ளக கணக்காய்வாளர் தேவை. முன் அனுபவமுடைய தகுதியானவர்கள் தராதரப் பத்திரங்களுடன் 27, 28-03-97 திகதிகளில் காலை 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்குமிடையில் நேரில் சமுகமளிக்கவும்.

முகாமையாளர் (ஆளணி)
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,

## Administrative Officer

Wanted an Administrative Officer for our Colombo Office.

Applicants should have experience in administration, Co-ordination and Supervision. Working knowledge in Tamil, English and Sinhala essential.

Typing knowledge will be an added qualification.

Accomodation (in Colombo) will be provided.

Walk in interview on 27 th and 28 th March 1997 from 9.00 a.m to 12.00 Noon.

**MANAGER,**
**"UTHAYAN"**
**361, KASTHURIAR ROAD,**
**JAFFNA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேதுருதாலகால மலைப் பகுதியில் பெரும் காட்டுத் தீ பரவியது!

## 50 ஏக்கர் வனப் பிரதேசம் அழிவு!!

கொழும்பு, மார்ச் 27

பேதுருதாலகால பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசத்தில் பெரும் காட்டுத் தீ பரவியதால் 50 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருந்த காடுகள் தீயினால் முற்றாக அழிந்து விட்டன.

இராணுவத்தினரதும், விமானப்படையினரதும் உதவியுடன் தீ ஏனைய பகுதிகளுக்குப் பரவாமல் தடுக்கப்பட்டு விட்டதாக வன விலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தீ பரவியதற்கான காரணம் தெரிய வரவில்லை.

காட்டுப் பகுதியில் எழுந்த பெரும் தீச்சுவாலைகள் பேதுருதாலகால மலைப் பகுதியில் உள்ள தொலைக் காட்சிக் கோபுரம் அமைந்த பகுதிக்குப் பரவும் ஆபத்து ஏற்பட்டதை அடுத்து தீயைக் கட்டுப்படுத்தும் பணி முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டதாக முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

விமானப்படை ஹெலிக்கொப்ரர்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. (ஐ)

# சனசமூக நிலையங்களின் சேத விவரங்கள் சேகரிப்பு

கொழும்புத்துறை, மார்ச் 27

கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் யாழ். மாவட்டத்தில் உள்ள சனசமூக நிலையங்கள் மற்றும் நூல் நிலையங்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் இழப்புகள் தொடர்பான பூரண விவரங்கள் சேகரிக்கப்படவுள்ளன.

யாழ். பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களமும், சனசமூக நிலையங்களின் சம்மேளனமும் இந்த விவரங்களைச் சேகரித்து வருகின்றன.

சம்பந்தப்பட்ட சகல ச. ச. நிலையங்களும் தமது இழப்புகள், சேதங்கள் தொடர்பான விவரங்களைப் பூரணப்படுத்தி, கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தி அவற்றின் பிரதிகளை உள்ளூராட்சித் திணைக்களத்துக்கும், சம்மேளனத்துக்கும் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ-30)

### தென்மராட்சிப் பகுதியில்

# தொழில் வங்கியில் பதிவதில் இளைஞர், யுவதிகள் ஆர்வம்

சாவகச்சேரி, மார்ச் 27

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இயங்கிவரும் தொழில் வங்கிப் பகுதிக்கு படித்த இளைஞர், யுவதிகள் தினமும் சென்று விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து வருகின்றனர்.

கடந்த வருடம் சுமார் 3,000-க்கு மேற்பட்டவர்கள் தொழில் வங்கியில் விண்ணப்பித்தனர் என்றும்—

இவ்வருடம் மார்ச் மாதம் வரை சுமார் 1,000 பேர் வரை விண்ணப்பித்தனர் எனவும் தொழில் வங்கிப் பிரிவினர் தெரிவித்தனர்.

செயலகத்தால் வழங்கப்படும் இவ் விண்ணப்பப் படிவத்துக்கு மூன்று ரூபா அறவிடப்படுகின்றது.

ஆனால் விண்ணப்பப் படிவங்களைச் செயலகத்தில் வைத்துப் பூர்த்தி செய்து உடனடியாக கையளிக்க வேண்டுமென தொழில் வங்கிப் பிரிவினரால் அறிவுறுத்தப்படுகிறது. (இ-31)

# விசேட அ. அட்டை வழங்கும் பணி மன்னாரில் ஆரம்பமாகியது

கொழும்பு, மார்ச் 27

மன்னார் மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட பகுதிகளில் வசிப்போருக்கான அடையாள அட்டைகளை வழங்கும் பணி கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மன்னார்த் தீவில் உள்ளவர்களுக்கு இள நீல நிற அட்டையும், பெருநிலப்பரப்புப் பகுதியில் உள்ளவர்களுக்கு இளம் பச்சை நிறங் கொண்ட அட்டையும் வழங்கப்படுகிறது.

இந்த விசேட அட்டைக்கு படம் எடுப்பதற்காக கொழும்பில் இருந்து ஒன்பது படப்பிடிப்பு குழுக்கள் மன்னாருக்குச் சென்றுள்ளன.

இந்த விசேட அடையாள அட்டைகளை வைத்திருப்போர் மன்னாரில் இருந்து வவுனியா மற்றும் நாட்டின் இதர பகுதிகளுக்கு தடைகள் ஏதுமின்றி பயணஞ் செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் வவுனியாவில் இருப்பது போன்ற போக்குவரத்துப் பாதுகாப்பு விதிகள் மன்னாரிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அறிய வருகிறது. (ஐ)

### தீவுப்பகுதியில் உள்ள

# உதவி அ. அதிபர் பணிமனைகளில் விரைவில் எழுதுநர்கள் நியமனம்

நெடுந்தீவு, மார்ச் 27

தீவுப்பகுதியில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் நிலவும் எழுதுநர்களுக்கான வெற்றிடங்களுக்கு அமைய அடிப்படையில் தகுதிவாய்ந்தவர்களை நியமனஞ் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறும்.

பரீட்சார்த்திகள் பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டை அல்லது வேறு அடையாள அட்டை, கல்வித் தகைமைச் சான்றிதழ், வதிவிடத்தைச் சேர்ந்த கிராம அலுவலாளரால் வழங்கப்படும் சான்றிதழ்களை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

நெடுந்தீவில் இருந்து பின்வருவோர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்:

தில்லையம்பலம் கிரிதரன், கணபதிப்பிள்ளை சுந்தர்ராஜன், கோவிந்தபிள்ளை குமுதினி, யோகராசா தேவகுஞ்சரி, நடராசா யசோதர, யக்கரியாஸ் தேவதாஸ். (ஐ-111)

# சமய சந்நிதிகளில்

சாவகச்சேரி கிராம்புவில் படையாண்டான் தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய மூலஸ்தான அடிக்கல் நாட்டுவிழா இன்று வியாழக்கிழமை காலை 9.26 மணி முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (ஐ-30)

★ ★ ★

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் கடந்த 16ஆம் திகதி தொடக்கம் தினமும் மாலை 3 மணி முதல் பன்னிரு திருமுறை ஓதப்பட்டு வருவதாக ஆதீன மேலாளர் தெரிவித்துள்ளார். (ஐ-30)

★ ★ ★

யாழ். அன்ன சத்திர ஒழுங்கையில் அமைந்துள்ள வேம்படி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 14ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இன்று வியாழக்கிழமை காலை சங்காபிஷேகத்துடன் உற்சவம் நிறைவு பெறும். (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகரர் விநாயகர் கோயிலில் இன்று வியாழக்கிழமை மாலை 3.30 மணி தொடக்கம் அபரபட்சம் (கிருஸ்ண பட்சம்) சதுர்த்தி திருவிழா நடைபெறும்.

மாலை 4.30 மணிக்கு பெருமான் எலி வாகனத்தில் வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். (ஐ-30)

★ ★ ★

நீர்வேலி தெற்கு ஒல்லை வேம்படி ஸ்ரீ ஞான வைரவ சுவாமி கோயில் மணவாளக் கோலத் திருவிழா அடுத்த மாதம் 3ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. (ஐ-30)

★ ★ ★

மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமை சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரெண்டு நாள்களுக்கு நடைபெறும். (ஐ-152)

## பற்சிகிச்சை நிலையம்

திருநெல்வேலி மார்ச் 27

யாழ். மத்திய கல்லூரியில் மாணவர் நலன் கருதி பற்சிகிச்சை நிலையம் ஒன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுளள்து. யாழ். சுகாதாரத் திணைக்களம் இதற்கென ஒதுக்கிய ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபா நிதியைக் கொண்டு இந்தப் பற்சிகிச்சை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான விசேட உபகரணங்களும் பெறப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் திரு. க. இராஜதுரை தெரிவித்தார். (ஐ-135)

# செய்திச் சாரம்

## கொக்குவில் இந்து பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

## கப்பலில் செல்லும் நோயாளர்களுக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 27

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் கொழும்பு செல்வதற்காக யாழ். போதனா வைத்திய சாலையில் பதிவு செய்து இதுவரை தங்கள் பயணத்தை மேற்கொள்ளாதவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் பணிமனையில் தமது பயணம் தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-5)

## இந்து மகளிர் கல்லூரியில் விவேகானந்தர் விழா

திருநெல்வேலி, மார்ச் 27

யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு வைபவமும், பக்வான் ஸ்ரீ ராமகிஸ்ருணரின் சீடரான சுவாமி யோகானந்தரின் ஜெயந்தி தின வைபவமும் நடைபெறவுள்ளன.

அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கி யாழ். 2 ஆம் கிளை முகாமையாளர் திரு. வே. ஐயம்பெருமாள் கலந்து கொள்வார்.

திரு நா. வி. மு. நவரத்தினத்தின் பண்ணிசையும் இதில் இடம்பெறவுள்ளது. பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி. சித்ரூபானந்தாவும் இதில் கலந்து கொள்வார். (ஐ-135)

## தென்மராட்சியில் திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 27

மட்டுவில் நுணாவில் திருவாசகம் முற்றோதல் குழுவினர் தென்மராட்சியில் திருவாசகம் முற்றோதலை நடத்தி வருகின்றனர்.

மாதத்தில் (தமிழ் மாதம்) முதல் ஞாயிற்றுக் கிழமை நுணாவில் கண்ணகை அம்பாள் ஆலயத்திலும், இரண்டாவது ஞாயிறு நுணாவில் முருகன் ஆலயத்திலும், மூன்றாவது ஞாயிறு கைதடி நுணாவில் வைரவர் ஆலயத்திலும் 4 ஆவது ஞாயிறு கைதடி ஏக்கலை விநாயகர் ஆலயத்திலும் திருவாசக முற்றோதல் இடம்பெற்றுவருகிறது.

இக் குழுவின் பணியின் இரண்டாம் ஆண்டு நிறைவு நாள் வைபவம் கடந்த 16 ஆம் திகதி நுணாவில் கண்ணகை அம்மன் கோயிலில் நடைபெற்றது. (ஐ)

## செயல்முறை அமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 27

எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய யாழ். கல்வி வலயம்—1 தொலைக்கல்விப் பயிற்சி ஆசிரியர்களுக்கான செயல்முறை அமர்வு எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

## நெல்லியான் பகுதியில் ஆயுர்வேத நிலையம்

செம்பியன்பற்று, மார்ச், 27

செம்பியன்பற்று தெற்குப் பகுதி மக்களின் நலன் கருதி மருதங்கேணி பிரதேசசபையின் அனுசரணையுடன் நெல்லியான் பகுதியில் இலவச சித்த ஆயுர் வேத வைத்திய சாலைக் கிளைஒன்று அண்மையில் திறக்கப்பட்டுள்ளது. வாரத்தில் இரு தினங்கள் இவ் வைத்தியசாலை செயற்பட்டு வருகிறது. (ஐ-36)

## மரணவிசாரணை அலுவலகம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ். போதனா வைத்திய சாலையில் மரணவிசாரணை அதிகாரி அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ஐ-173)

## உரும்பராய் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள்

உரும்பிராய், மார்ச் 27

உரும்பிராய்ப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

வீட்டில் எவரும் இல்லாத நேரங்களில் யன்னல்களூடாகத் தடிகளை உள் நுழைத்து உடுப்புகளைத் திருடிச் செல்லும் சம்பவங்கள் இப்பகுதியில் இடம்பெறுகின்றன.

உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் வீதியிலுள்ள ஓய்வு பெற்ற ஆசிரியரின் வீட்டில் யன்னலோரமாக இருந்த முகம்பார்க்கும் கண்ணாடி, றேடியோ முதலிய பல பொருள்கள் இரவு எல்லோரும் நல்ல உறக்கத்தில் இருந்த வேளையில் திருடப்பட்டுள்ளன. (ஐ-154)

## உரும்பிராய் மத்திய மருந்தகம்

உரும்பிராய், மார்ச் 27

உரும்பிராய் அரசினர் மத்திய மருந்தகம் அதற்குப் பொறுப்பான உதவி வைத்திய அதிகாரி நிரந்தரமாக நியமிக்கப்படாததனால் முறையாக இயங்கவில்லை. இதனால் இப்பிரதேசத்தி லுள்ள நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-154)

## 52 பேருக்கு மூளை மலேரியா

தென்மராட்சி, மார்ச் 27

காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றவர்களில் 52 பேர் மூளை மலேரியாக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளமை ஆஸ்பத்திரி மலேரியா பரிசோதனைப் பிரிவினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் பெரும்பாலானோர் வன்னியிலிருந்து சாவகச்சேரிப் பிரதேசத்துக்கு வந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தினமும் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற வருவோரில் சராசரியாக இருபது பேர் மலேரியாக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக மலேரியா ஆய்வு கூட தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ-117)

## தந்தை செல்வா நினைவு ஆராதனை

திருநெல்வேலி மார்ச் 27

தெல்லிப்பழை கிராம மக்களின் சார்பாக யாழ். தென்னிந்திய திருச்சபையின் யாழ். அத்தியட்ச உடுவில் தேவாலயத்தில் தந்தை செல்வாவின் 99 ஆவது ஜனன தின நன்றி தெரிவிக்கும் ஆராதனை எதிர் வரும் சனிக்கிழமையன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த ஆராதனையில் யாழ். அத்தியட்சாதீன ஆயர் வண. கலாநிதி எஸ். ஜெபநேசன், சா. ஆ. தர்மரத்தினம், எஸ். சகாயசீலன் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர். (ஐ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

இறைச்சிக் கோழி(புறொயிலர்), மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: Y-G. R O. (கிறிஸ்துவுக்காக இளைஞர்) 462, பிரதான வீதி, சுண்டுக்குளி. [45989]

இந்தியன் 10 H.P. என்ஜின், 20 அங். சொனி T.V குழந்தைகளுக்கான தொட்டில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஸ்ரீதாமோதரராசா, யாழ். றெக்ஸ், வட்டுகிழக்கு, சித்தன்கேணி. (45973)

பத்து நாள்களில் குட்டி ஈணவிருக்கும் சுத்த சணல் ஆடு விற்பனைக்குண்டு. தொடர்பு: க. சுதாகர சர்மா அரச கால்நடை வைத்திய வளவு, K. K. S. வீதி, சுன்னாகம் (மண்ணெய் நிரப்பு நிலையம் அருகாமை). (9436)

**புலமைப் பரிசில்**

ஆண்டு 5 கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார்படுத்துபவருக்குமான ''ஆண்டு 5 புதியபாடத் திட்டம் 1997'' எல்லாப்பாடங்களையும் உள்ளடக்கியது. கிடைக்குமிடம்:- பூபாலசிங்கம் புத்தகசாலை. யாழ்ப்பாணம். (சி-376)

### ரணில் பிறந்த தினம்

கொழும்பு, மார்ச் 27

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் தனது 48 ஆவது பிறந்த நாளை கொழும்பில் கொண்டாடினார். (ஐ)

### அகதிகளை ஆயர் சந்தித்தார்

குருநகர், மார்ச் 27

வன்னியில் இருந்து வள்ளங்கள் மூலம் வந்து குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலையில் தங்கியுள்ள குடும்பங்களை யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகையும்,யாழ். மறைக் கோட்ட முதல்வர் வண பிதா ஜே.பி.ஈ. செல்வராசா அடிகளாரும் நேற்று முன்தினம் சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர். (ஐ-51)

### ச'ச.நிலையம் புனரமைப்பு

கொழும்புத்துறை, மார்ச் 27

அரியாலை, சண்டி வீதியில் உள்ள சரஸ்வதி சனசமூக நிலையம் புனரமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அப்பகுதியில் நீண்டகாலமாகச் செயற்படாமல் இருந்த குழாய்க் கிணறு திருத்தப்பட்டு தற்போது அதன் மூலம் குடிதண்ணீர் பெறப்பட்டு வருகிறது. (ஐ-30)

**யா/ ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் கிடைக்கும்**

மேற்படி பாடசாலையில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி யடைந்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் புகைப்படம் எடுத்தவர்கள் பாடசாலையில் படங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. சிவராசா

**சுஜா போட்டோ**

இல. 36, பாரதி வீதி,
யாழ்ப்பாணம்.

(45993)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அமரர் சி. செல்வநாதன் (எம் பி)**

(யாழ். சலூன் உரிமையாளர், வஸ்தியன் சந்தி)

தோற்றம்: **1947 — 04 — 20**

மறைவு: **1997 — 02 — 25**

அன்பின் குலவிளக்காய், குடும்பத்தின் ஒளிவிளக்காய் சிரிக்காதவர்களையும் செய்கையால், பகிடியால் சிரிக்க வைத்துவிடுவாய். இனிதே வாழ்க்கை நடத்த, குடும்பத்தாருடன் யாழ். நோக்கி ஓடிவந்த வேளையில் பாழாய்போன நெஞ்சு வருத்தம் வந்து, வவுனியாவில் உயிர்பிரியும் என்று யார் தான் எண்ணியது! ஐயகோ!

அன்னாரது மரணச் செய்தி கேட்டு, வீட்டிற்கு நேரில் வந்தும், அனுதாபச் செய்தி அனுப்பியும், வன்னியில் நடைபெற்ற இறுதிக் கிரியைகளில் கலந்தும் கொண்ட உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் என் நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அந்தியேட்டிக் கிரியைகள் வன்னியில் நடைபெறும்.

பிரிவால் துயருறும்:
சி. நாகேந்திரம்
[சகோதரன்]

463, நாவலர் றோட்,
அரியாலை.

(45990)

## மலிவு விற்பனை

- ★ கர்(F)போம் பிறசியர்,
- ★ சில்வர் சீல்ட் சொக்ஸ் வகைகள்.
- ★ புடைவை வகைகள்,
- ★ பிஸ்கட் வகைகள்

மொத்தமாக மலிவு விலையில் விற்பனைக்குண்டு.


**சிறி முருகன்**

303, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(45992)

## 12 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 26 — 04 — 1926



மறைவு: 08 — 04 — 1985

**சின்னையா மார்க்கண்டு**

**திதி: 27 - 03 - 1997**

தங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அன்பு மனைவி,
சகோதரன், சகோதரிகள்,
மருமக்கள், மைத்துனர்,
மைத்துனிமார்.

பிரதான வீதி,
சங்கானை கிழக்கு,
சங்கானை.

(45980)

## 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

உடுவிலைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் ஆ. யோகராசா**

(ஓய்வு பெற்ற எழுதுவினைஞர், கோண்டாவில்வடக்கு சிவபூதவராயர் ஆலய பரிபாலன சபைச் செயலாளர்)

அவர்கள் 25 - 02 - 97இல் மல்லாவியில் காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனை அடைகின்றோம்.

அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவபூதவராயரைப் பிரார்த்திப்பதுடன் துயரால் வாடும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிவபூதவராயர் பரிபாலனசபையினரும்,
பொதுமக்களும்.

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(45982)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**திருமதி செல்லையா முத்தம்மா**

**திதி: 27-03-1997**

★ ★ ★

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 30 — 06 — 1945



மறைவு: 30 — 03 — 1991

**அமரர் செல்லையா சந்திரசேகரம்**

(இ.போ.ச. நடத்துநர்)

பாசத்தைப் பொழிந்து அன்புடன் வளர்த்து எம் நெஞ்சங்களில் என்றுமே நீங்காத நினைவுகளுடன் எம்மை விட்டுப் பிரிந்த பாசமுள்ள அப்பாவே! தங்கள் ஆத்மா அமைதியுற தினந் தினம் இறைவனின் பாதங்களில் கண்ணீரைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

அன்புத் தெய்வமே! நின்பிரிவால் வாடும்:
**மனைவி, மக்கள்.**

பத்தமேனி,
அச்சுவேலி.

(45986)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 12 — 08 — 1928



உதிர்வு: 19 — 03 — 1995

**திருமதி பூரணம் வீரகத்தி**

**திதி: பங்குனி அபரபக்க திருதியை 27 - 03 - 97**

ஆண்டு இரண்டு சென்றதுவே அம்மா உன்
அன்பு முகம் மறையவில்லை பாரினில்
அறிவுரைக்க உன்போலத்தாய் இனியுளதோ?
ஏங்கித்தவிக்கும் எமக்கினி ஆதரவும் உலகில்
உண்டோ?
சிறப்பான ஒரே கூண்டில் ஒன்றாக வாழுமென
சீரான சிறகதனால் அணைத்து வளர்த்தனையே
சிறகுமுளைக்கு முன்னம் கூண்டைவிட்டுப்
பறந்தனையே!
சிறகற்ற குஞ்சுகள் நாம் திசைமாறிப் பறந்தோமே!
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புக் கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

கச்சார்வெளி,
பளை.

(சி/329)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### காரணம் சரியா?

உத்தியோக பூர்வ விஜயத்தை மேற் கொண்டு இலங்கை வந்த பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத் கொழும்பில் இரண்டு நாள்கள் தங்கியிருந்தார்.

முதலாம் நாள் அவர் கூட்டம் ஒன்றில் சிறப்புரை ஆற்றினார். இலங்கையில் அமைதியை உருவாக்கும் பொருட்டு, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்காக, அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு தாம் மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என்று அப்போது அறிவித்தார்.

இனப்பிரச்சினையால், போரினால், இலங்கையில் அமைதி குலைந்திருப்பது கண்டு அவர் கவலை கொண்டார். எனவே அமைதியை இங்கு மீண்டும் கொண்டு வருவதற்கு உதவும் விதத்தில் அரசு — புலிகள் பேச்சுக்கு மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என்று சொன்னார்; அவரே தமது வாயால் திரும்பவும் திரும்பவும் சொன்னார்.

இரண்டாம் நாள் வெளிவிவகார அமைச்சு ஏற்பாடு செய்த பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் கலந்து கொண்டார். அந்த மாநாட்டில் வைத்து அவரது மத்தியஸ்த உதவி நிராகரிக்கப் படுவதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அறிவித்தார்!

வீடு தேடி வந்து, 'நீங்கள் துன்பப்படுகிறீர்களே, அந்தத் துன்பத்தை நீக்க நான் உதவி செய்கிறேன்' என்று தாமாக உதவ வந்தவரிடம் முகத்தில் அறைந்து கலைத்து விடுவது போல —

யஸீர் அரபாத்தின் முகத்துக்கு முன்னாலே, நேருக்கு நேர், அவரது உதவி தேவையில்லை — நிராகரிக்கப்பட்டது — என்று லக்ஷ்மன் கதிர்காமர் சொன்னார்! பாவம், அரபாத்! ஏன் பொல்லைக் கொடுத்து அடியை வாங்கினேன் என்று நினைத்துக் கொண்டு விமானம் ஏறியிருப்பார்!

அரபாத்தின் மத்தியஸ்த உதவியை நிராகரிப்பதற்கு வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ள காரணமோ வேடிக்கையானது.

அதிபர் அரபாத் தமது மத்தியஸ்த உதவி குறித்து உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை என்று கதிர்காமர் பத்திரிகையாளர் மாநாட்டில் சொன்னார்.

ஆனால் அரபாத்தோ, முதல் நாள் கூட்டத்தில் பேசும் போது, எனது மத்தியஸ்த உதவியை இப்போது உத்தியோக பூர்வமாக வழங்குகின்றேன் (Iam offering it officially now) என்று கூறியிருந்தார்,

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை ஏற்பதற்குத் தாம் தயார் என்று ஜனாதிபதி சந்திரிகா 1996 ஒக்ரோபரில் ''புரொண்ட்லைன்'' சஞ்சிகைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர் மத்தியஸ்தம் செய்வதற்கு விருப்பம் தெரிவித்த நாடுகள், இருதரப்பினரும் தம்மிடம் கேட்டுக் கொண்டால் மட்டுமே அதனைச் செய்யத் தயார் என்று அறிவித்தன.

அப்படி ஒரு நிபந்தனையுமின்றி ''எனது இதயத்திலிருந்து உங்கள் இதயத்துக்குப் பேசுகிறேன்'' என்று தானாக உதவ வந்ததால் தான், அரபாத், முகத்தில் அறைந்து அனுப்பப்பட்டாரோ என்னவோ...?

# யாழ்.குடாநாட்டில்காணாமற்போன 676 பேர் குறித்துத் தகவல் இல்லை

## மனித கௌரவத்துக்கான இயக்கம் அறிக்கை

கொழும்பு, மார்ச் 27

''1996 ஆம் ஆண்டு 'சூரியப் பிரகாசம்' இராணுவ நடவடிக்கையின் பின்னர் யாழ். குடாநாட்டில் நூற்றுக் கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் கைது செய்யப்பட்டனர். அவர்களில் சிலர் விடுவிக்கப்பட்டனர். ஆனால் கைது செய்யப்பட்டவர்களில் 676 பேர் தொடர்பான விபரங்கள் இதுவரை கிடைக்கவில்லை. அவர்கள் தொடர்பான விவரங்கள் எதுவும் தமக்குத் தெரியாது என்று பாதுகாப்புத் தரப்பினரும் கைவிரிக்கின்றனர்.''

மனித கௌரவத்துக்கான இயக்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பத்திரிகை ஒன்றில் வெளியாகியுள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

காணாமற் போனோரின் பட்டியலில் உள்ள 676 பேரில் 576 பேர் யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

வடமராட்சிப் பகுதியில் இருந்து எமக்கு முறைப்பாடு எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. வடமராட்சியில் படையினருக்கும், பொது மக்களுக்கும் இடையே நல்லுறவு நிலவுகிறது. அதற்காக வடமராட்சிப் பகுதிக்கு பொறுப்பான இராணுவ அதிகாரியைப் பாராட்டுகின்றோம்.

யாழ். நகரிலும் மேஜர் ஜெனரல் பலகல்லவின் பொறுப்பின் கீழ் தற்போது முன்னேற்றமான நிலை காணப்படுகிறது.

யாழ். குடாநாட்டில் தென்மராட்சி மற்றும் மானிப்பாய், கோண்டாவில், கொக்குவில் போன்ற பகுதிகளில் இராணுவத்தினரின் அத்து மீறல்கள் அதிகமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதிகளில் தற்போதும் கண்மூடித்தனமான கைதுகள் இடம்பெற்று வருகின்றன.

1996 இன் இறுதிப் பகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற் போனவர்களில் 271 பேர் தொழில் செய்பவர்கள். 86 பேர் பாடசாலை மாணவர்கள். 149 பேர் 14 - 20 வயதுக்கு உட்பட்டவர்கள். 375 பேர் 30 - 40 வயதுக்குட்பட்டவர்கள். 22 பேர் 40-60 வயதுக்கு உட்பட்டவர்கள். ஏனையோரது வயது விவரங்கள் கிடைக்கவில்லை.

1996 ஒகஸ்ட் மாதத்தில் தான் காணாமற் போனோரின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. 361 பேர் அந்த மாதத்தில் மட்டும் காணாமற் போயுள்ளனர் — என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பு முகாம்கள் சிறைச்சாலைகள், பொலீஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்; அல்லது காலதாமதமின்றி வழக்குத் தொடரப்பட வேண்டும் என்றும் மனித கௌரவத்துக்கான இயக்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

## தந்தை செல்வா ஞாபகார்த்த ஆராதனை

யாழ்ப்பாணம், மார்ச் 27

தந்தை செல்வாவின் 99 ஆவது வயது நிறைவை ஒட்டி நன்றி செலுத்தும் வழிபாடு எதிர்வரும் திங்கட்கிழமை (31ஆம் திகதி) யாழ். பரியோவான் ஆலயத்தில் நடைபெற உள்ளது.

அன்று பி.ப. 3.30 மணிக்கு (புதிய நேரம்) 99ஆம் ஆண்டு நிறைவு ஆராதனை ஆரம்பமாகும்.

தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் ஆயர் அதி. வண. கலாநிதி டி. ஜே. அம்பலவாணர் பாராட்டுரை வழங்குவார்.

றோமன் கத்தோலிக்க யாழ். மறை மாவட்ட ஆயர் அதி.வண. கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் இறைசெய்தி வழங்குவார்.

யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஒன்றியம் நன்றி செலுத்தும் வழிபாட்டு நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

# நுண்கலைப்பீடத்தில் வெற்றிடங்கள் தகுதியானோர் பற்றாக்குறையாம்!

திருநெல்வேலி, மார்ச்27

இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் விரிவுரையாளர்களுக்கான வெற்றிடங்கள் பல நிரப்பப்படாமல் உள்ளன.

பல்கலைக்கழக மானியக் குழு வரையறுத்துள்ள கல்வித் தகைமைகளையுடையவர்களுக்கு நிலவும் பற்றாக் குறையினால் இந்த விரிவுரையாளர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்ப முடியாத நிலையில் இருப்பதாக யாழ். பல்கலைக்கழகப் பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்தார்.

இதே வேளை —

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பேராசிரியர்களுக்கான பதவிகள் பல வெற்றிடங்களாக உள்ளன.

உடற் கூறியல், சமூக மருத்துவம், மருந்தியல் மருத்துவம், குழந்தை வைத்தியம், அறுவைச் சிகிச்சை, நுண்ணியல், சட்ட வைத்தியம் ஆகிய துறைகளுக்கான பேராசிரியர் பதவிகளே வெற்றிடங்களாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

## போலி சட்டத்தரணிக்கு 3 ஆண்டுச் சிறை!

நுவரெலியா, மார்ச் 27

சட்டத்தரணியாக உயர் நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் எடுக்காது நுவரெலியா நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக வழக்குகளில் ஆஜரான ஒருவருக்கு நுவரெலியா மாவட்ட நீதிபதி மூன்றாண்டு கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

போலி கடிதத் தலைப்பு மற்றும் 'சீல்'களை வைத்திருந்த அவர் கடந்த மூன்றாண்டு காலமாக நுவரெலியா நீதி மன்றத்தில் சட்டத்தரணியாகத் தொழில் புரிந்து வந்துள்ளார். (இ-10)

## திருநெல்வேலி விவசாய பண்ணை விரைவில் புனரமைக்கப்படும்

திருகோணமலை, மார்ச் 27

திருநெல்வேலியிலுள்ள 12 ஏக்கர் விஸ்தீரணமுள்ள விவசாயப்பண்ணை வடக்கு— கிழக்கு மாகாணசபையின் விவசாய, காணி அமைச்சினால் புனரமைக்கப்படவுள்ளது.

திருநெல்வேலி விவசாயப் பண்ணை முன்னர் விவசாயப் பயிற்சி நிலையமாகவும் செயற்பட்டு வந்தது.

தற்போது முட்கம்பி வேலி போடப்பட்டு அங்குள்ள ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

இத்தகவலை மாகாண விவசாய, காணி அமைச்சு செயலாளர் எம். காதர் முகைதீன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண விவசாயிகள் நல்லஇன பசுமாடுகள்தேவை எனக்கோரியுள்ள தாகவும் —

இப்பசுமாடுகளை இறக்குமதி செய்து சகாய விலையில்விவசாயிகளுக்கு வழங்கவுள்ளதாகவும் — அவர் தெரிவித்தார். (இ- 10)

## பேச்சுக்கான முயற்சிகளை அரசு முனைப்புடன் எடுக்க வேண்டும்

### ஜோசப் பரராஜசிங்கம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 27

அமைதி, சமாதானம் ஏற்பட வேண்டும் என்று அரசு விரும்பினால் அல்லது அதனை நோக்கமாகக் கொண்டிருந்தால் உடனடியாகப் பேச்சு வார்த்தைக்கு முன்வர வேண்டும். இருதரப்பினரும் போர் நிறுத்தத்திற்கு முன்வந்து பேச்சு வார்த்தையில் ஈடுபடாமல் அமைதியை ஏற்படுத்த முடியாது.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

தாளமுனை புனித வளனார் கல்லூரி பாடசாலை தின வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் நீதி அரசமைப்பு விவகார அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான பேராசிரியர் பீரிஸும் விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தத் தயார் என அறிவித்தமை வரவேற்கத் தக்கது.

உண்மையில் சமாதானத்தை ஏற்படுத்துவது அரசின் நோக்கமாக இருந்தால் பேச்சுவார்த்தைக்குரிய நடவடிக்கைகளை முனைப்புடன் மேற்கொள்ள வேண்டும் — இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

### நாளை

**பங்குனி 15**

வெள்ளிக்கிழமை

திதி: சதுர்த்தி

பிற்பகல் 1.32 வரை.

நட்சத்திரம்: விசாகம்

பிற்பகல் 04.02 வரை

பெரிய வெள்ளி

சுபநேரம்: 06.14-07.44

ராகுகாலம்: 11.44-12.14

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## பாழடைந்த கிணற்றிலிருந்து பெண்ணின் எலும்புக்கூடு மீட்பு

### ஊர்காவற்றுறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

பாழடைந்த கிணறு ஒன்றைத் துப்புரவு செய்த போது அதனுள் காணப்பட்டதாக இளம் பெண் ஒருவரின் உடலின் எலும்புகள் நேற்று ஊர்காவற்றுறைப் பொலீஸாரால் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

ஊர்காவற்றுறை தம்பாட்டிக் கிராமத்தில் உள்ள பாடசாலைக் கிணறு ஒன்றில் இருந்தே இந்த எலும்புகள் கண்டெடுக்கப்பட்டன.

5 வருடங்களுக்கு மேலாக இயங்காதிருந்த இந்தப்பாடசாலை கடந்த இருவாரங்களாக இயங்க ஆரம்பித்துள்ளதாகவும்—

பாழடைந்த நிலையில் நீர் வற்றி, பற்றை செடிகள் முளைத்துக் காணப்பட்ட இந்தப்பாடசாலைக் கிணறு பாவனைக்காக சிரமதானப் பணியில் துப்புரவு செய்யப் படுவதாகவும்—

துப்புரவு செய்து கொண்டிருந்த வேளையே கிணற்றின் அடியில் எலும்புக்கூடு காணப்பட்டதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

அதனை எடுத்துப் பார்த்த வேளையில் அது ஓர் உருவத்தின் அமைப்பில்தலையில் இருந்து கால்வரை சகல எலும்புகளும் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

துருப்பிடித்த நிலையில் வாளிக்கம்பி மற்றும் கயிறு, கோடரி ஆகியவையும் கிணற்றில் காணப்பட்டன.

யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட இந்த எலும்புகள் ஆஸ்பத்திரி சட்ட வைத்திய அதிகாரியினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

யாழ். ஆஸ்பத்திரி பல் வைத்திய அதிகாரி ஒருவரின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட இப் பரிசோதனை அறிக்கையின் படி, இச்சம்பவத்தில் உயிரிழந்தவர், சுமார் 18 முதல் 20 வயதுடைய இளம்பெண் எனவும்—

ஒரு வருட காலத்துக்குள்ளேயே இப்பெண் மரணமடைந்திருப்பதாகவும் இவர் சுமார் 5 அடி உயரமுடையவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேல் நுட்ப பரிசோதனைக்கென அனைத்து எலும்புகளும் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக யாழ். ஆஸ்பத்திரி சட்ட வைத்திய அதிகாரியால் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## செயல் அமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 27

ஆரம்பப் பிரிவு ஆங்கிலம் ஆகியகற்கை நெறிகளுக்கான செயல் அமர்வு எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ்ப்பகுதி நீதிபதி ஒருவர் கட்டாய லீவில் அனுப்பப்பட்டார்

## ஜனாதிபதி நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 27

வடக்கு - கிழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவர் ஜனாதிபதியால் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளார் என அறியப்படுகிறது.

அவரது வீட்டில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த 15 வயது, 12 வயது நிரம்பிய இரு சிறுமிகள் அண்மையில் களுத்துறைப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதையடுத்தே இவர் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

களுத்துறைப் பகுதியில் வீதியில் அலைந்த இந்தச் சிறுமிகள் இருவரையும் பொலீஸார் விசாரணை செய்தபோது தம் மீது பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டதாக சிறுமிகளில் ஒருத்தி முறைப்பாடு செய்திருந்தார் என்று சொல்லப்படுகிறது.

பொலீஸாரின் விசாரணையை அடுத்து நீதிச் சேவை ஆணைக்குழுவின் சிபார்சின் பேரில் பிரஸ்தாப நீதிபதி கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளார்.

இத்தகைய முறைப்பாடு ஒன்றின் பேரில் சாதாரண பிரசை ஒருவரைக் கைது செய்து நீதிபதி முன் ஆஜர் செய்ய முடியும். ஆனால் இந்த முறைப்பாடு நீதிபதி ஒருவருக்கு எதிராக அமைந்துள்ளதால் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட வேண்டும் என்று சொலிஸிடர் ஜெனரல் சி. ஆர். டி. சில்வா தெரிவித்தார்.

பொலீஸார் இவரைக்கைது செய்ய முடியாது என்றும் —

சட்டமா அதிபரின் ஆலோசனைப்படி செயற்படவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

பிரஸ்தாப நீதிபதி தொடர்பான முறைப்பாடுகள் அடங்கிய ஆவணங்களை தமக்கு அனுப்புமாறும் அவர் கேட்டுள்ளார்.

இந்த விவரங்களை கொழும்புப் பத்திரிகையான ''த ஐலண்ட்'' வெளியிட்டது. (இ-3-150)

## சீனி, பருப்பு விலை குறைப்பு

கொழும்பு, மார்ச் 27

சீனி, மைசூர்பருப்பு, மீன்ரின் ஆகியனவற்றின் விலையைக் குறைக்குமாறு வர்த்தக அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரத்ன கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்துக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இதன்படி ஒரு கிலோ சீனியின் விலை முப்பது ரூபாவில் இருந்து 28.50 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது என லங்காதீப நாளிதழ் தெரிவித்தது. (இ-10)


உ

வண்ணை

ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தானம்

ஆலோசனைச் சபை

வண்ணை ஸ்ரீவீரமாகாளி அம்பாள்தேவஸ்தானத்தில் தற்போது ஆலோசனைச் சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஆலயத்திருப்பணிகள் பற்றிய ஆலோசனைகளை கடித மூலமோ, நேரிலோ வழங்கலாம்.

★ ஆலயத் திருப்பணிக்கு உதவ விரும்புவோர்

கணக்கு இல. 11896
2 ஆம் தரக்கிளை இலங்கை வங்கி
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக் கணக்கிற்கு பண உதவிகளை வழங்கலாம்.

ஆலோசனைச் சபை உறுப்பினர்கள்:

★ சிவஸ்ரீ சி. வேதாரணியக் குருக்கள் (கரணவாய்)
★ சிவஸ்ரீ சி. செல்வராசக் குருக்கள்
★ சிவஸ்ரீ கை. திருஞானசம்பந்தக் குருக்கள்

- ஆலோசனைச் சபையினர்

(சி/ 379)



யாழ். நகரில் மீண்டும் ஆரம்பம்

ஐடியல் கல்வி நிலையம்

கே. கே எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

யாழ். பிரபல ஆசிரியர் குழுவுடன்
ஆண்டு 9, 10, 11 வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

எமது ஆசிரியர் குழு

| | |
|---|---|
| தமிழ், சமயம் | திரு. கதிர்காமத்தம்பி. |
| கணிதம் | திரு, பவான். |
| விஞ்ஞானம் | திரு. புவிராஜ். |
| ஆங்கிலம் | திரு. சகாதேவன். |
| சமூகக்கல்வி, வர்த்தகம் | யாழ். பிரபல ஆசிரியர் |

மீட்டல் வகுப்புக்களும் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

29 - 3 - 97 சனி காலை தொடக்கம்
வகுப்புக்கள் ஆரம்பம்.

(46002) - நிர்வாகி


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27-03-1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# செயலகத்தில் நடந்த கூட்டத்தில் பல விடயங்கள் ஆராயப்பட்டன

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த வடமாகாண மீள்குடியேற்ற அதிகார சபைத் தலைவர் சோமபால குணதீர யாழ். செயலகத்தில் நடந்த கூட்டத்தில் விவசாய அபிவிருத்தி குறித்து விவசாயத் திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட விவசாய அபிவிருத்தித் திட்டங்கள், சந்தைப்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள் ஆகியன தொடர்பாக இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

கைத்தொழில், கலாசாரம், விளையாட்டுத் துறைகள் குறித்தும் அந்த அந்தத்துறைகள் சார்ந்தவர்களுடன் கலந்துரையாடல்கள் இடம் பெற்றன.

கல்வி, தொழிற்பயிற்சி, வர்த்தகம் ஆகிய துறைகள் தொடர்பான கலந்துரையாடல்கள் இன்று இடம்பெறும். (இ-3)

## 3 கப்பல்களில் 828 பேர் இன்று பயணம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு 828 பேருடன் 3 கப்பல்கல் இன்று சேவையில் ஈடுபட இருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள கப்பல்களுடன் புதிதாகச் சேவையில் ஈடுபடவிருக்கும் 'மிஷன்' என்னும் கப்பலும் இன்று தனது சேவையை ஆரம்பிக்கிறது.

யாழ். சிவில் அலுவலகத்தில் கப்பலில் செல்லப்பெயர் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 523 க்கு உட்பட்டவர்கள் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன் பயணம் செய்ய வேண்டும் என்றும்—

அதன் பின் பயணம் செய்ய முடியாது என்றும்—யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

பட்டியல் இலக்கம் 524 முதல் 551 வரையானவர்கள் எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து 14 நாள்களுக்குள் பயணம் செய்ய வேண்டும் என்றும்—

அதன்பின் பயணம் செய்ய முடியாது என்றும்— அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## குஞ்சர் கடையடி தாக்குதலில் மூவர் பலி

யாழ்ப்பாணம், மார்ச் 27

இமையாணன் குஞ்சர் கடையடியில் காவற்கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது தாம் நடத்திய தாக்குதலில் இராணுவ தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்தினருக்கு உதவி புரிவதற்காக பஜிரோ வாகனத்தில் இராணுவப் பொலீஸார் வந்ததாகவும், வாகனம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இரண்டு பேர் மரணமானதாகவும் வாகனம் சேதமடைந்ததாகவும் விடுதலைப் புலிகளினால் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் இம் மாதம் 20 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## உடுவிலில் ஈஸ்ரர் பஜனை

யாழ்ப்பாணம், மார்ச் 27

தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீனத்தின் சமயக் கல்விக் குழு வழங்கும் உயிர்த்தெழுந்த திருநாள் பஜனையும் இசை நாடகமும் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரி [illegible] அருகில் நடைபெறும். (இ-4)

## வலி. வடக்கில்

## மீளக் குடியேறியோருக்கு ஐ. நா அபிவிருத்தித் திட்டம் உதவும்

யாழ்ப்பாணம், மார்ச் 27

வலி — வடக்கில் மீளக் குடியேறும் குடும்பங்களுக்கு உதவ 4 கோடி 10 லட்சம் ரூபாவைக் கோரி ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பிடம் அவசர உதவித் திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மீளக்குடியேறும் மக்களுக்கு தற்காலிக கொட்டில்கள் அமைத்தல், குசினிப் பாத்திரங்கள் வழங்கல் போன்ற பணிகளுக்கு உதவவே இத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

வலி — வடக்கில் மீளக் குடியேற்றும் திட்டத்தை விரைவாக செயல்படுத்தும் வகையில் ஓரிரு நாள்களில் யாழ். அரச அதிபர் 51 ஆவது படையணி கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பலேகல்லவுடன் பேச்சு நடத்தவிருக்கிறார். (இ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயமும், யாழ். தெல்லிப்பழை கட்டுவன் புலம் மகாவித்தியாலயமும் இணைந்து நடத்தும் பாடசாலைகளின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை மைதானத்தில், வித்தியாசாலை அதிபர் ந. மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் முதன்மை விருந்தினராக வலி வடக்கு பிரதேச செயலர் நா. வேதநாயகன் பங்குகொள்வார். (இ-15)

## வடமராட்சி கிழக்கில் பம்பாய் வெங்காயம் பயிரிட உத்தேசம்

செம்பியன்பற்று, மார்ச் 27

யாழ். மாவட்டத்தில் பம்பாய் வெங்காயம் செய்கை பண்ண உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட இடங்களான அராலி, செம்பியன் பற்று, குடத்தனை அம்பன் பகுதிகளிலேயே பம்பாய் வெங்காயம் செய்கை பண்ண உத்தேசிக்கப்பட்டுள்ளது. (ஐ-36)

# உரிய முறையில் விற்கப்படாத மருந்து வகைகள் அழிக்கப்பட்டன

திருநெல்வேலி, மார்ச் 27

கையினால் எழுதப்பட்ட 'லேபல்' கள் ஒட்டப்பட்டு விற்பனை செய்யப்பட்ட மருந்து வகைகள் கொட்டி அழிக்கப்பட்டன.

பருத்தித்துறைப் பகுதியில் உள்ள ஆங்கில மருந்து விற்பனை நிலையம் ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

யாழ். மாவட்ட உணவு, மருந்து பரிசோதகர் ரி. மகாதேவன் கடந்த வாரம் வடமராட்சி பகுதியிலுள்ள தனியார் மருந்தகங்களில் திடீர் பரிசோதனை மேற்கொண்டார்.

அப்போது உற்பத்தி செய்யப்பட்ட நிறுவனத்தின் பெயர் விவரம் இல்லாததும் —

''ஒறிஜினல் லேபல்'' இல்லாததுமான மருந்துகள் பருத்தித்துறைப் பகுதி மருந்தகம் ஒன்றில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

யாழ். ஆங்கில வர்த்தகர் சங்கத்தினால் எழுதப்பட்ட 'லேபல்' மாத்திரமே மருந்து கொள்கலனில் ஒட்டப்பட்டிருந்ததாகவும் —

இது உணவு, மருந்து சட்ட விதிகளுக்கு முரணானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப மருந்துகள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. (இ- 135- 15)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்)

துள்ளது.

குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளதால் அங்கு தேர்தலை நடத்த முடியும் என்று இராணுவ மற்றும் அரசாங்க வட்டாரங்கள் நம்புவதாக ''த ஐலண்ட்'' தெரிவிக்கிறது.

வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை ஜனவரி ஏழாம் திகதி நடத்துவதற்கு முன்னர் அறிவிப்புச் செய்யப்பட்டிருந்தது. பின்னர் மார்ச் 7 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டு இப்போது ஜூலை 7 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் அதற்கு முன்னரே தேர்தலை நடத்த வேண்டிய தேவை அரசுக்கு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

குடாநாட்டு உள்ளூராட்சித் தேர்தலை அண்டி அரசாங்கத்தின் தீர்வுப் பொதியின் புதிய வடிவம் முன் வைக்கப்படலாம் என்றும் பேச்சடிபடுகிறது.

யாழ். குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதால் குடாநாட்டில் தேர்தலை நடத்த முடியும்.

அங்கு சிலபகுதிகளில், குறிப்பாக வலிகாமம் மேற்கில், படையினர் நிரந்தரமாக நிலைகொள்ளவில்லையானாலும், தேர்தல் நடத்தத் தேவையான கட்டுப்பாட்டைப் படையினரால் கொண்டுவர முடியும் என இராணுவம் நம்புகிறதாம்.

இதே வேளை —

குடாநாட்டில் தேர்தல் நடத்துவதன் மூலம் வெளிநாட்டில் அரசின் செல்வாக்கை உயர்த்த முடியும் என்று அரசியல், பாதுகாப்பு வட்டாரங்கள் கருதுகின்றன என்று 'த ஐலண்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதை தாம் எதிர்க்கப் போவதில்லை என்று ஈ.பி.டி.பி. செயலானர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அந்தப் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

இத்தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக தமது கட்சி ஜூன் மாதமளவில் முடிவு செய்யும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org